தேதி - 10.02.2026.

அசல் வழக்கு எண்.173/2004

பி.வா.சா.3 - திரு. அப்துல் ரசீத்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 3 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் பழைய மரங்கள் விற்பனை செய்யும் கடை வைத்துள்ளேன். நான் வட்டிக்கு கொடுக்கும் தொழிலும் செய்து வருகிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. நான் வருமான வரி கணக்கு வைத்துள்ளேன். நான் 10 வருடங்களாக வருமான வரி கணக்கு செலுத்தி வருகிறேன். இந்த வழக்கின் 6 ம் பிரதிவாதி அனிதா பர்வீன் என்னுடைய மனைவி ஆவார். 20.06.2004-ல் எனக்கும், 6 ம் பிரதிவாதிக்கும் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு முன்பு எனது மனைவிக்கும், எனக்கும் உறவுமுறை எதுவும் இல்லை. எனக்கும், 6 ம் பிரதிவாதிக்கும் திருமணம் நடைபெற்றதற்கு முன் என் மாமனார் வீட்டில் என்ன விஷயங்கள் நடைபெற்றது என்பது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. இந்த வழக்கு யாரால், யாருக்கு எதிராக என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது பற்றி எனக்கு தெரியும். 2 ம் வாதி அனார்கலிக்கு 3 மகள்கள், 1 மகன் உள்ளனர் என்று சொன்னால் அது சரிதான். அனார்கலியின் மூத்த மகள் பெயர் சபீனா. சபீனாவின் கணவர் வாஹித் ஆவார். நான் சபீனாவிடம் 2013 ல் 7 பவுன் நகை வட்டி தொழிலுக்காக வாங்கினேன் என்று சொன்னால் என் மனைவி மரக்கடை தொழிலுக்காக அந்த நகையை வாங்கினார். நான் தான் நகையை வாங்கினேன் என்று சொன்னால் அது சரியல்ல. நான் நகையில் 2 -1/2 பவுன் மட்டும் திருப்பி கொடுத்தேன் என்றும், மீதியை

கொடுக்கவில்லை என்றும் சொன்னால் அதுபற்றி என் மனைவியிடம் தான் கேட்க வேண்டும். நகையை திருப்பி கொடுப்பதாக சபீனாவிற்கு ஆவணம் ஒன்றை எழுதி கொடுத்தேன் என்றும், அது என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றும் சொன்னால் அது சரிதான். அந்த ஆவணம் **வா.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ( அதன்படி நகையை திருப்பி கொடுத்துவிட்டதாக சாட்சி கூறுகிறார்.) அதன்படி நகையை திருப்பி கொடுக்கவில்லை என்றும், அதை கேட்டதற்காக வாதிகள் மீது விரோதம் கொண்டு வாதிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. நான் நகையை திருப்பி கொடுக்கவில்லை என்றும் அதனால் வா.சா.ஆ.14 வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் அது சரியல்ல. (எடுத்து தருவதாக வாதி சொன்னதாகவும் ஆனால் திருப்பி தரவில்லை என்றும் சாட்சி கூறுகிறார்). நகையை திருப்பி கொடுக்கவில்லை என்றும் அதனால் வா.சா.ஆ.14 ஐ திரும்ப பெறவில்லை என்றும் அதை வாதி திருப்பி கொடுப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் அது சரியல்ல. 17.08.2007 ல் 8 ம் பிரதிவாதி ஒரு தரப்பாகவும், 2 முதல் 7 பிரதிவாதிகள் மற்றொரு தரப்பாகவும் இருந்து ஒரு ஒப்பந்தம் பேசி கொண்டதாகவும், அதன்படி ரூ.49,000/- வங்கி வரைவோலை மூலம் ரூ.1,000/- ரொக்கமாகவும் 8 ம் பிரதிவாதி பெற்றுகொண்டதாகவும் பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. அவ்வாறு 8 ம் பிரதிவாதி ஆவணம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. அவ்வாறு ஆவணம் தயார் செய்யப்பட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. 17.08.2007 ல் ஒரு ஒப்பந்தம் எழுதப்பட்டதாகவும், அதில் 8 ம் பிரதிவாதியும், 2 முதல் 7

பிரதிவாதிகளும் கையெழுத்து போட்டதாகவும், சாட்சிகள் 5 பேர் கையெழுத்து போட்டதாகவும் பொய்யாக கூறியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. 17.08.2007 ம் தேதி கையெழுத்திட்டதாக கூறும் பெர்னார்சிர் பேகம் அந்த தேதியில் இளவர் என்று சொன்னால் அவர் இளவரா என்று எனக்கு தெரியாது. எந்தெந்த சொத்துக்களுக்கு வழக்கு நடைபெறுகிறது என்று எனக்கு தெரியாது. கதவு எண்.28, கீழ வெளி வீதியில் உள்ள சொத்து 4 நபர்களுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதில் 1ம் பிரதிவாதி காஜா கமாலுதினுக்கு ஒரு பங்கு உள்ளது என்று சொன்னால் அது சரிதான். மதுரை, கீழ வெளி வீதி, கதவு எண்.28 வீட்டில் ஒரு பகுதியில் நாளது தேதிவரை 8 ம் பிரதிவாதி அப்துல் சகிலா குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் அது சரிதான். எனது நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்று சொன்னால் அது சரியல்ல. வாதி மீது விரோதம் கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

Sd/- அப்துல் ரசீத்

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

MUTHUKUMARAN

Digitally signed by MUTHUKUMARAN
Date: 2026.02.10 11:22:08 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

மதுரை.